"மில்க்வைற் சலவைப் பவுடர்"
அவசர உலகில் திடீர் சலவைக்குப் பாவியுங்கள்.
25 வெற்றுப்பக்கற்றுகளுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி.

மக்கங்கள் நான்கு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00
சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 20 சனிக்கிழமை (04 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 97

மில்க்வைற் நீல சோப்
"சுடர்விளக்காயினும் தூண்டு கோல் ஒன்று வேண்டுமல்லவா?"
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்.
25 மேலுறைகளுக்கு ஒரு யோகாசனப் புத்தகம்

# பல்கலைக் கழக அனுமதி முறையில் தமிழருக்கு எதிராக பெரும் மோசடி!

## ஐ. நா. டாக்டர் குழு யாழ். வரும்

கொழும்பு, மார்ச் 4

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொண்டர் வைத்தியக் குழு ஒன்று யாழ்ப்பாணம் செல்லத் தயாராகி வருவதாக ஐ. நா. அபிவிருத்தித் திட்ட பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் செல்லவுள்ள குழுவில் 7 டாக்டர்கள் அடங்குவர். (ஐ-6)

## விதிகளை மீறி மானிய ஆணைக்குழு தில்லுமுல்லு

முச்சந்தி முரசு



அப்ப தமிழ் மாணவரின் வயிற்றில் அடிக்கிற வேலை சகல மட்டங்களிலும் நடந்து வருகுது என்று சொல்லுங்கோ...!

யாழ்ப்பாணம், மார்ச் 4

பல்கலைக்கழக அனுமதி முறையில் தமிழருக்கு எதிராக பெரும் மோசடி வெளியே தெரியாமல் இடம்பெற்று வந்திருப்பது அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஏற்கனவே தமிழருக்கு எதிராக மாவட்ட அடிப்படையிலான அனுமதி முறையை ஸ்ரீலங்கா அரசு கடந்த 25 வருடங்களாக கடைப்பிடித்து வருவது ஒரு புறமிருக்க —

அந்த அனுமதி முறையிலும், ஒழுங்கு விதிகளுக்கு மாறாக பெரும் மோசடி இடம் பெற்று வருவது புள்ளிவிவரங்கள் மூலம் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

திறமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழங்குவதால் தமிழர் பெரும் எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்களுக்குப் புகுவதை அவதானித்த ஸ்ரீலங்கா அரசு, அதனைத் தடுப்பதற்காக மாவட்ட "கோட்டா" முறையை 1970 களில் புகுத்தியது தெரிந்ததே.

இதன்படி —

ஜி. சீ. ஈ.(உயர்தரப்) பரீட்சைப் பேறுகளின் பிரகாரம், திறமை அடிப்படையில் 40 வீதமானோரும், மாவட்ட அடிப்படையில் 55 வீதமானோரும் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து எஞ்சிய ஐந்து வீத மானோரும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டது.

இந்தத் தரப்படுத்தல் கொள்கை கடந்த சுமார் 25 ஆண்டு காலமாகக் கடைப்பிடிக்கப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டு வந்தது.

ஆனால் —

முன்னைய காலங்களில் மாணவரின் ஜி. சீ. ஈ [உயர்தர] பரீட்சை பெறுபேறுகள் புள்ளி விவரம் வெளியிடப் படாது தரங்களின் அடிப்படையில் [''ஏ'', ''பி'', ''சி'', ''எஸ்'', ''எவ்''] என மட்டுமே வெளியிடப்பட்டு வந்ததால் —

பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமாக அறிவிக்கப்பட்ட கொள்கை சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்ற

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பேராசிரியரின் மனைவி கூட ராகிங்குக்கு தப்பவில்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் மட்டுமன்றி, வெளியாரும் "ராகிங்" வதைக்கு ஆளாக வேண்டி உள்ளது.

பல்கலைக்கழக வளாகத்துக்குள் போகும் எல்லோரும் மாணவர்கள் என்று கணிக்கப்படுவதாலோ என்னவோ, வெளியாரும் வேண்டாத வதைக்கும் மன வேதனைக்கும் ஆளாக வேண்டி வருகிறதாம்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி நண்பகல் 12.30 மணியளவில், அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரின் மனைவிக்கும் இந்த அவலம் அனுபவமாகியது.

கைலாசபதி கலையரங்குக்கு அருகில் வாகனங்கள் நிறுத்தப்படும் இடத்தில் ஆரம்பித்த "ராகிங்" பல்கலைக்கழக பிரதான வாசல் வரை தொடர்ந்ததாம்.

பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியின் தலைவரான அந்தப் பேராசிரியரின் மனைவி, பலவித வதைகளுக்கு மட்டுமன்றி, தூஷண வார்த்தை வசை மாரிக்கும் ஆளாக நேரிட்டதாக —

சம்பந்தப்பட்ட பேராசிரியர் பல்கலைக்கழக துணை வேந்தருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்து விசாரணை

(4ஆம் பக்கம் பார்க்க)

## எமது உண்ணாவிரதப் போராட்டம் அரசினால் உதாசீனம்

### யுத்தக்கைதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

"எமது விடுதலையைக் கோரி நாம் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதத்தை அரசு உதாசீனம் செய்வதாக நாம் கருத வேண்டியுள்ளது. எமது கடிதத்துக்கு அரசிடமிருந்து எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை"

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகள் நேற்று மாலை மேற்கண்டவாறு தெரிவித்தனர்

தாம் முதலாம் திகதி உண்ணாவிரதம் ஆரம்பித்த போது அது தொடர்பாக ஜனாதிபதி, பிரதி பாதுகாப்பு அமைச்சர், பொலீஸ் மா அதிபர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியிருந்ததாகவும் —

ஆனால் அரசிடம் இருந்து எதுவித பதிலும் இன்று [வெள்ளி] வரை கிடைக்கவில்லை என்றும் —

அரசு எமது விடுதலையை உதாசீனம் செய்யுமானால் நாம் திட்டமிட்டபடி 7 ஆம் திகதி முதல் எதுவித ஆகாரமும் இன்றி சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பிப்போம் என்றும் — உண்ணாவிரதிகள் மேலும் தெரிவித்தனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் கூட தம்மை பார்க்க வரவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

[இ-3-4-7)

## பி. பி. ஸி. செய்தியாளர் வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச். 4

பி பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ச் ஆர்னி இன்று கிளாலி ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்வார்.

(இ-3)

## மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள் செவ்வாயன்று புலிகளுடன் பேச்சு

### மறுதினமே கொழும்பு திரும்பவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச்.4

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரும் 12மேற்கு நாட்டுத் தூதுவர்கள் அன்றே விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தவிருக்கின்றனர்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை கொழும்பில் இருந்து புறப்படும் இவர்கள் திருகோணமலைக்கு சென்று அன்று மாலை அங்கிருந்து "சீடான்ஸர்" கப்பல் மூலம் புறப்பட்டு மறுநாள் காலை 7மணிக்கு பருத்தித் துறைக்கு வந்து சேர்வர்.

அன்று காலை யாழ் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுவதுடன் பேச்சுகளை நடத்துவர்.

அதனைத் தொடர்ந்து யாழ். அரச அதிபரையும் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடுவார்கள்.

அன்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்து இன்றைய அரசியல் நிலை குறித்து பேச்சுக்கள் நடத்துவர்.

மறுநாள் அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம், எம் எஸ்.எவ். ஐக்கிய இராஜ்சிய சிறுவர் பாதுகாப்புநிதியம் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடுவதுடன் அன்று நண்பகல் கொழும்பு திரும்புவர்.

(இ 3)

## உடல் பலவீனத்தினால் எழுந்திருக்க முடியவில்லை

யாழ்ப்பாணம். மார்ச் 4

'உடலில் தென்புஇன்றி சோர்வடைந்துள்ளோம். வயிற்று எரிவு, வயிற்றோட்டம் போன்றவற்றால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம்'

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளில் ஒருவரான டி. ஜி. தர்மவர்த்தன மேற்கண்டவாறு உதயனுக்கு தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி முதல் நீராகாரம் மட்டும் அருந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள 15 பொலிஸாரையும் ஓர் இராணுவ சிப்பாயையும் நேற்று பிற்பகல் சந்தித்தசமயம் தமது நிலை குறித்து டி. ஜி. தர்மவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எழுந்து இருக்க முடியாத நிலையில் படுக்கையில் படுத்தவாறு அவர் காணப்பட்டார். (இ-3-4-7)

## பிரிட்டிஷ் உதவி அமைப்பின் பிரதிநிதிகள் யாழ். வருவர்

யாழ்ப்பாணம்,மார்ச் 4

பிரிட்டிஷ் அரசின் உதவி வழங்கும் நிறுவனமான "ஓவஸீஸ் டெவலெப்மென்ற் ஏஜென்ஸி" (O.D.A) யைச் சேர்ந்த பிரதிநிதிகள் நால்வர் எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி, பல்கலைக் கழகம், கல்வி நிலையங்கள், சுகாதார நிலையங்கள் என்பனவற்றுக்கு உடனடியாகத் தேவைப்படும் உதவிகளை வழங்க இந்த பிரிட்டிஷ் நிறுவனம் முன்வந்துள்ளது.

அந்த வகையில் உதவி வழங்குவது குறித்து நேரில் பார்வையிடுவதற்காகவே அதன் பிரதிநிதிகள் நால்வர் இங்கு வரவுள்ளனர்.

1987ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் யாழ். ஆஸ்பத்திரி பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. [ஐ 3]

## ஜெயலலிதா பதவி விலக கோரிக்கை

சென்னை மத்திய சிறையில் இருந்து விடுதலைப் புலிப் போராளிகள் தப்பிய சம்பவம் தொடர்பான முழு விவரங்களும் வெளிக் கொணரப் பட வேண்டுமானால் தமிழக முதல்வர் பதவியில் இருந்து செல்வி. ஜெயலலிதா பதவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நரோமா கப்பல் சேவை செவ்வாயன்று

யாழ்ப்பாணம், மார்ச்.4

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த பயணிகளுக்கான 'நரேரமா' கப்பல் சேவை நாளை நடைபெறாது எனவும் இச்சேவை எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 6ஆம் திகதி திருமலையிலிருந்து புறப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம். மார்ச். 4

★ கிளாலி – பூநகரி படகுச் சேவை நேரத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று விடுதலைப்புலிகளின அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

புதிய நடைமுறையின் படி —

★ வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களின் பிற்பகல் 3 மணி முதல் இரவு 8 மணி வரை இருபக்க படகுச் சேவையும் —

★ ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6 மணி முதல் காலை 7 மணி வரை பூநகரி ஆலங்கேணியில் இருந்து கிளாலிக்கு ஒரு பக்க படகுச் சேவையும் — நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் படகுச் சேவை நடைபெறும். (இ 3)

## தற்போது ஏற்பட்டுள்ள நம்பிக்கையை எச்சரிக்கையுடனே அணுகுகிறோம்

### மட்டக்களப்பு - திருமலை ஆயர் பி.பி.ஸி.க்கு பேட்டி

லண்டன், மார்ச். 4

சமாதானத்தைப்பற்றி இப்போது நடக்கும் பேச்சு வார்த்தை மூலம் நம்பிக்கை தோன்றியுள்ளது. முன்னர் இருந்த நம்பிக்கைகளிலும் பார்க்க கூடுதலான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனினும் அந்த நம்பிக்கையை எச்சரிக்கையாகத்தான் அணுகுகிறோம்.

மட்டக்களப்பு - திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை அரசு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண ஆணைபெற்றுள்ளதால் அரசு தனது பொறுப்புணர்வைக் காட்ட நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

எச்சரிக்கையுடன் இருந்தாலும் நம்பிக்கையுடனும் இருக்கிறோம் —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## ஆசிய வங்கி பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்புப் பணிகள் குறித்து நேரில் ஆராய ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

இவர்கள் யாழ். வருவதற்கு முன் ஜனாதிபதி உட்பட உயர் மட்டப் பிரதிநிகளுடன் பேச்சு நடத்துவர் என்று தெரியவருகிறது.

(இ-3)

## வடக்குக்கான மின்சார விநியோகம் பிரிட்டிஷ் அரசு நிதிவழங்க விருப்பம்

### பொறியியலாளர் யாழ். வருகிறார்

கொழும்பு, மார்ச். 4

வடக்குக்கான மின்சார விநியோகத்தை மீள வழங்க தேவையான நிதியை வழங்க பிரிட்டிஷ் அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கான மதிப்பீடுகளை நடத்த பிரிட்டிஷ் அரசாங்கம் மின்சாரத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த திரு. லைன் கேவ் என்ற பொறியியலாளரை கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

இவர் கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும்வரவிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் 11 கே. வி. மின்திட்டம், கிளிநொச்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போராட்ட காலத்தை பிரதிபலிக்கும் கலை இலக்கிய படைப்புக்கள் தேவை

### கருத்தரங்கு ஆரம்ப விழாவில் சொக்கன்

யாழ்ப்பாணம், மார்ச். 4

எமது மண்ணில் கடந்த இருபது வருடங்களாக உயர்ந்த குறிக்கோளை முன் வைத்து ஒரு போராட்டம் நடைபெற்று வருகிறது.

ஆகையால் எமது கலை இலக்கிய படைப்புக்கள் போராட்டத்துக்கு அனுசரணையாக, அதற்கு உறுதுணையாக, அதனைப் பிரதிபலிப்பனவாக அமைய வேண்டும்.

தமிழீழவி தலைப் புலிகள் [illegible] "வெளிச்சம்" சஞ்சிகையும் இணைந்து நடத்தும் மூன்று நாள் கலை இலக்கியக் கருத்தரங்கின் முதல் நாள் காலை நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய வித்துவான் க. சொக்கலிங்கம் [சொக்கன்] இவ்வாறு கூறினார்.

கலை, இலக்கியக் கருத்தரங்கு நேற்றுக் காலை நல்லூர் இளங்கலைஞர் மண்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுக்களுக்கு இடையே இணக்கம் பேண தனிக்குழு!

### அமைப்பதற்கு அரசு முடிவு

கொழும்பு, மார்ச்.4

அமைச்சுக்களுக்கு இடையே அபிப்பிராய பேதங்கள், கருத்து முரண்பாடுகள் தோன்றுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக விசேட அமைச்சர் குழு ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி "லங்கா தீப" பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

[ஐ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

45நாட்கள் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (மூன்று பெண் ஒரு ஆண்) தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: "ரவான் வளவு", இந்துக் கல்லூரி வீதி, சித்தன்கேணி. [35430]

நல்ல நிலையிலுள்ள E N மொடல் மொறிஸ் மைனர் தொடர்பு கொள்ளவும். ரத்தினம் சுராஜ், வீரமாகாளி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம். (35487)

11 மாத வயதுடைய சுத்த இன சணன்கடா, Jawa Sparrows, African Love Birds, பன்டம் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. மனோன் அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய் (35468)

ஒரு மாதம் நிரம்பிய மணித்தாராக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: இல.71, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (35450)

Broiler இறைச்சிக்கோழிகள் காலை 7 மணி தொடக்கம் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அடைவைக்கக்கூடிய நீல் லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள், இதரை வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். (35472)

2 மாதம் நிரம்பிய அழகிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 34, ஈச்சமோட்டை, பீச் றோட், யாழ்ப்பாணம். (35479)

### கோழிகள் விற்பனைக்கு

சில்க்கி, பிறீசில், பாமாஸ், பிறாமா மற்றும் கோழிக் கூடுகளும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல. 55, அச்சேரி, நல்லூர் வீதி (கற்பக விநாயகர் கோயிலடி), நல்லூர், யாழ்ப்பாணம் (35486)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima, Hyline Brown, Christombu, Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [35471]

### புலமைப் பரிசில்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை [1995] கணிதம், தமிழ், ஆங்கிலம், பொது உளச்சார்பு ஆகிய பாடங்கள் 5-3-95 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். வினாத்தாள் தேவையானோர் தொடர்பு கொள்ளவும்: புதிய சல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (35489)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்க்கும் வெளிநாடு உள்நாட்டுக் குறிப்புகள் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம். கே கே. எஸ். வீதி, மல்லாகம். [8267]

### வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிச்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

### இலகு திருமண சேவை

30 வயது, அவிட்டம் 1, செவ்வாய் 8, பிரான்ஸில் பத்து ஆண்டுகள் தொழில் புரிந்து யாழ். வந்துள்ளார். சொந்தத்தில் தொழில் ஆரம்பிக்க உள்ளவருக்கு ஆசிரியை விரும்பத்தக்கது. து. விமலா, நாச்சிமார் கோயிலடி. [35453]

### வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம பிரதான வீதியில் [மடத்தடி சந்தியில்] A/L அல்லது O/L படிக்கும் மாணவர்களுக்கு (ஆண்கள்) அறை வாடகைக்கு உண்டு. உடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 764, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35474]

### வீடு தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 965. மே/பா உதயன். [சி-398]

### LITERATURE

Answers for past Question Paper 92, 93, 94, English Literature, Poems, Answer to Question on Poems, Poetry WorkBooks, Prose and Drama. Oliver Twist Madol Doova by A. K. Hewage. Available at Poobalasingham, Book Depot. Jaffna. (C-601)

### வகுப்புகள்

ஜெயா கேக், ஐசிங் பயிற்சி வகுப்புக்கள் (சமயற்கலை, ஐசிங் வகைகள் Emproiere works, Flower Making, கலியாண கேக் வடிவமைப்புக்கள்) 10ஆம் திகதி ஆரம்பமாகின்றன. தொடர்பு: ஜெயா கேக், ஐசிங் ஸ்தாபனம் இல. 7, ஜெயமகால், கற்குழி ஒழுங்கை, சாவகச்சேரி. [8365]

### மணமக்கள் தேவை

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய 8இல் செவ்வாயுடைய 36 வயது மணமகனுக்கும், உதயத்தில் செவ்வாயுடைய 33 வயது மணமகளுக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யலாம். முழுவிவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 763, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35355]

### வகுப்புக்கள் ஆரம்பம்

**05 — 03 — 1995**
மாலை 4 மணிக்கு

கேக், ஐசிங் மற்றும் ஆங்கில வகுப்புக்கள். ஆசிரியர் திருமதி செல்வராணி தேவராஜா, கேக் ஐசிங் ஆசிரியர் திருமதி செல்லையா யோகரட்ணம். ஆங்கிலம் முதலில் ஆண்டு 1இல் இருந்து ஆண்டு 6வரை. இதனை தொடர்ந்து மற்றைய பிரிவு நடைபெறும்.

இடம்:
10, தேவாலய வீதி,
சாவகச்சேரி,
நகர் சிக்கன கடன் உதவு சங்கம்.
(சி/716)

## BIO TEC INTERNATIONAL (PVT.) LTD.

Walk in Interview For

**TECHNICAL ASSISTANT**

to be trained in Bio Technological Processing.
Bring Certificates and Documents

| | |
|---|---|
| Qualification: | G. C. E. (A/L) Science |
| Date: | 6th March 1995 |
| Time: | 2 — 4 p.m. |
| Place: | 234, Sir P. Ramanathan Road, Thirunelveli, Jaffna. |

[35488]

## 9-ம்ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா முத்துவேற்பிள்ளை**
(முன்னாள் அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

தோற்றம்: **11 — 05 — 1916**
மறைவு: **04 — 03 — 1986**

மானிப்பாய் மண்ணில் நல்ல முத்தாய் அவதரித்து
மானிப்பாய் சிறக்க வழிபலவே செய்திட்டாய்.
மானிப்பாய் இந்துவின் பொற்காலம் நீ படைத்தாய்
மானி மகளிர் கல்லூரி உருவமைத்த சிற்பியானாய்,
வரியிறுப்போர் சங்கமதை மகிழ்வுடனே உருவாக்கி
வரியிறுப்போர் துயர் துடைக்க வழிபலவே-
அமைத்திட்டாய்.
நீ புனரமைத்த மானிநகர் நூல்நிலையம்
என்றும் உன் புகழை ஓங்கி ஒலிக்குதுவே;
சைவத்தை வளர்த்திடவே இந்து சங்கமதின்-
தலைவனானாய்,
பண்ணிசையைப் பாங்குடனே பலர்பாட வழிசெய்தாய்
தலைமைப் பதவி யெல்லாம் தானாக வந்தடைந்தும்
தலைக்கனமேதுமின்றி தாழ்மையுடன் செயற்பட்டாய்;
செயல்வீரா! ஊருக்குழைத்த உத்தமனே!
மறப்போமோ உந்தன் புகழைப் பெருமையினை
உனை அறிந்த ஊர்மக்கள்.

நண்பர்கள்,
பழைய மாணவர்கள்.

(8362)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி தவமணி கனகரத்தினம்**

மண்ணில்: **22 — 11 — 1924**
ஈசனடியில்: **07 — 03 — 1992**

திதி: **04 — 03 — 1995**

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

86, பலாலி வீதி,
திருநெல்வேலி.
[35492]

## ஓராண்டு நினைவஞ்சலி





திருமதி
**இந்திராணி பரந்தாமன்**
பிறப்பு: **20 — 02 — 1944**

செல்வி
**கௌரி பரந்தாமன்**
பிறப்பு: **29 — 07 — 1974**

இறப்பு: **15 — 03 — 1994**

திதி: **04 — 03 — 1995**

பாசத்தின் பிணைவுகளோடு பயணமாகிய -
பறவைகளே
ஓராண்டென்ன பல ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகளில் ஏங்கியே நிற்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
தகப்பன், சகோதரர்கள்.
உறவினர்கள்.

20, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
[35490]

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: **22 — 01 — 1964**



உதிர்வு: **20 — 01 — 1995**

சுவிஸில் அகால மரணமடைந்த
அமரர்
**ஆறுமுகம் விக்கினேஸ்வரராஜா**
**(விக்கி)**

குடும்ப சுபீட்சத்தையே கொள்கையாகக் கொண்ட எம் குல விளக்கே! வாழ வேண்டிய நேரத்தில் அந்நிய நாட்டில் ஆதரவற்ற நிலையில் எம் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த விக்கி! உன் ஆன்மா சாந்தியடைய அனுதினமும்கண்ணீரோடு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நாளை (05 — 03 — 1995)ஞாயிற்றுக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

காவெட்டி.
(35451)

# தாதியருக்கு வெளிநாட்டில் அதிக வேலைவாய்ப்பு

## சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச். 4

இலங்கைத் தாதிமாருக்கு வெளிநாடுகளில் அதிக வேலைவாய்ப்பிருப்பதாக தெரியவந்துள்ளது. மலேசியா அரசு அங்கு பணிபுரிய 250 தாதிமாரை தந்துதவும்படி இலங்கை அரசை கேட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி இதனைத் தெரிவித்தார்.

இது பற்றி கொழும்பில் தமது அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

பயிற்சி முடிந்து வெளியேறிய 269 தாதிமார்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவத்தில் பேசியபோது அமைச்சர் இத்தகவல்களை வெளியிட்டார்.

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

சுகாதார சேவையில் இருந்து வரும் சம்பள முரண்பாடுகள் விரைவில் தீர்க்கப்படும் என்றும்—இச் சேவையில் பதவி உயர்வுக்கான திட்டம் ஒன்றும் அமுல் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

## மேலதிக ஆணையாளராக தமிழர்?

யாழ்ப்பாணம், மார்ச் 4

பரீட்சைத் திணைக்களம், வெளியீட்டுத் திணைக்களம் ஆகியவற்றில் தமிழ் மொழி மூல வேலைகளைக் கவனிப்பதற்காக தமிழர் ஒருவரை மேலதிக ஆணையாளராக நியமிப்பதென கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதே வேளை கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிகசெயலாளராகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் தமிழர்களை நியமிப்பதற்கும் கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழர் ஆசிரிய சங்க செய்திக் குறிப்பு ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-14]

## இன்று

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூலக வாசகர் வட்டம் இன்று சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (ஒ-14- 173)

## மீண்டும் பஸ் சேவையை ஆரம்பிக்குக!

தென்மராட்சி, மார்ச் 4

நீண்டகாலமாக இடை நிறுத்தப்பட்டுள்ள சாவகச்சேரி — பளை, சாவகச்சேரி— கொடிகாமம் மினி பஸ் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் தென்மராட்சி மினி பஸ் சங்கத்தினரைக் கேட்டுள்ளனர். (ஒ-117-14)

# பயன்கருதாப் பணிசெய்து மக்களுக்கு உதவ வேண்டும்

## லயன்ஸ் கழக விழாவில் உரை

பட்டம், பதவிக்காக செயற்படாமல், பயன் கருதாப்பணிகளைச் செய்து அல்லற்படும் மக்களுக்கு நாம் உதவ வேண்டும்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற லயன்ஸ் கழகத்தின் விழாவில் கலந்து கொண்டு பேசிய உதவி அரச அதிபர் திரு. எஸ். மகாலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: லயன்ஸ் கழகம், லியோ கழகம் ஆகியவற்றின் பணி மேன்மையுள்ளது. லியோ கழகத்தினர் உற்சாகம் உள்ளவர்கள். இவர்களின் பணி பாடசாலை மட்டத்துடன் மட்டும் நின்று விடக்கூடாது இப்பணியில் பொதுமக்களையும் பங்குகொள்ளச் செய்ய வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட லன்யஸ் கழக யாழ் பிராந்தியத் தலைவர் திரு. இராஜேஸ்வரன் தமது உரையில் கூறியதாவது:

உலகில் சிறப்புற வாழ்வதற்கு ஆளுமை அவசியம். அதற்கு தன்னம்பிக்கை அவசியம். தன்னம்பிக்கையை இளமைப் பருவத்திலேயேவளர்க்க வேண்டும். அத்துடன் சேவை மனப்பான்மையையும் வளர்க்க வேண்டும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் திரு. த. நவரத்தினராசா தலைமையில்நடைபெற்ற இந்நிகழ்வில், சாவகச்சேரி நகரசபை செயலாளர் திரு. சி. நடராஜா, சாவ. இந்துக்கல்லூரி அதிபர் திரு எஸ். சந்திரசேகரா, சாவ. மகளிர் கல்லூரி அதிபர்செல்வி கிருபா வீரசிங்கம், லயன்ஸ் கழக ஆலோசகர்திரு. இராமகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். [க-31-14]

## வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம் அவசர பொதுக்கூட்டம்

இன்று (4—3—1995) சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மேற்படி கூட்டம் நடைபெறும். எமது சங்க அனைத்து வர்த்தகர்களையும், ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பாக வலிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

— செயலாளர்
வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்,
கோப்பாய்.

(35493)

## நன்றி நவிலல்

03-02-95இல் கொழும்பில் அமரத்துவம் எய்திய
உயர்திரு
**கனகரெத்தினம் பாலசந்திரன்**

அவர்களின் மரணம் குறித்து நேரிலும், செய்தி மூலமும் அனுதாபத்தை தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியறிதலைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தனித்தனியே நன்றி கூற இயலாமைக்கு வருந்துகின்றோம்.

திருமதி நாகரஞ்சிதம் பாலசந்திரன் (மனைவி)
திரு. பாலசந்திரன் பாலேந்திரன் [மகன்]
திருமதி சிவகௌரி சுதன் [மகள்]
திருமதி சசிலேகா அருணேஸ்வரன் [மகள்]
திருமதி சத்தியலெட்சுமி இளையதம்பி [மாமியார்]
திரு. இளையதம்பி கருணாகரன் [மைத்துனர்]

14/1, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[35480]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## ஆலயங்களில் இராணுவம்

திருக்கேதீஸ்வரம் ஆலயப் பகுதியில் உள்ள இரு கட்டடங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேற்றப் படுவர்; அந்தக் கட்டடங்கள் ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்படும்.

இத்தகவலை சமய கலாசாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருக்கிறார். அனேகமாக, இராணுவத்துடன் கலந்தாலோசித்து, அவர்களின் சம்மதத்தைப் பெற்ற பின்னரே அமைச்சர் இதனைத் தெரிவித்திருக்க வேண்டும்!

இரண்டு கட்டடங்களில் தங்கியிருக்கும் இராணுவத்தினரை அகற்றினால் மட்டும் போதாது. அவ்வாலயத்துக்கு ஈழத்தின் சகல பகுதிகளிலிருந்தும் இந்து மக்கள் சென்று, வழிபாடு இயற்றக் கூடியதாக அந்தப் பகுதியில் இராணுவ நாற்றமே வீசாமல் படையினர் முற்றாக அகற்றப்பட வேண்டும்.

அப்போதுதான், 1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஏழாம் திகதிக்கு முன்னர் இருந்த ஆலயத்தின் புனிதச் சூழலை மீண்டும் உருவாக்க முடியும்.

ஆலயத்தைப் புனரமைக்கவும், முன்னரைப் போல முக்காலப் பூசைகளை தப்பாது செய்யவும், ஈழத்திலிருந்து மட்டுமன்றி சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலிருந்து வரும் யாத்திரிகர்களும் தங்கியிருந்து கேதீஸ்வரப் பெருமானை வழிபட வசதி செய்யப்பட வேண்டும்.

இவற்றைச் செய்யவேண்டிய முழுப் பொறுப்பும் அரசாங்கத்துக்கு உரியதே. புனருத்தாரண, புனர் நிர்மான வேலைகளுக்குரிய முழுச் செலவையும் அரசாங்கமே வழங்க வேண்டும். அதாவது, 1990 ஆகஸ்ட் ஆறாம் திகதி ஆலயம் இருந்த நிலைக்கு அதனை மீள்வித்துக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு.

ஈழத்திலும், வெளிநாடுகளிலும் உள்ள இந்துக்கள் அளித்த நிதி உதவியைக் கொண்டே இந்த ஆலயம் வெகு சிறப்புற அமைக்கப்பட்டது. ஆலயத்தையும், ஆலயப் பகுதியையும் அழித்துச் சேதப்படுத்தியும், அங்கு வாழ்ந்தவர்களை குடியெழுப்பியும், மக்களற்ற வனாந்தரமாக்கியவர்கள் அரசின் ஆயுதப் படையினரே.

ஆகையால் ஆலய வளவில் உள்ள இரண்டு கட்டடங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவதோடு தனது பணி முடிந்துவிட்டதாக அமைச்சரோ, அரசாங்கமோ கருதக் கூடாது.

திருக்கேதீஸ்வரத்தில் மட்டுமன்றி வடக்கு - கிழக்கில் உள்ள பல ஆலயங்களில் இந்து மக்கள் தமது அடிப்படை மனித உரிமையான வழிபாட்டு உரிமையை அனுபவிக்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், ஈழத்துச் சிதம்பரம், நயினை நாகபூசணி ஆகிய சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உட்பட பல ஆலயங்கள் பூசைகள் இன்றிப் பூட்டிக் கிடக்கின்றன.

அவற்றின் புனிதம் கெடுக்கப்பட்டு சாமிக்குப் பதிலாக ''ஆமி'' குடி கொண்டுள்ளது. ஆலயச் சூழல்களில் இருந்து மக்கள் வெளியேறிவிட்டதால் அவை பொலிவிழந்து மண்டிக்கிடக்கின்றன.

இதே நிலை, வடக்கில் உள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் உண்டாகியுள்ளது. அதனால் கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுரிமையும் பறிக்கப்பட்டுள்ளது.

பௌத்தர்களின் மத சுதந்திரத்தை உறுதி செய்வது, அதற்கு வகை செய்வது, உதவி செய்வது என்று மட்டுமன்றி, ஏனைய மத மக்களினதும் வழிபாட்டுரிமையையும் அரசு உறுதி செய்ய வேண்டும்.

அதன் பொருட்டு, வடக்கு-கிழக்கில் உள்ள ஆலயங்கள், தேவாலயங்கள் ஆலயப் பகுதிகளில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெற்று, அங்கிருந்து வெளியேறிய மக்கள் தத்தம் பகுதிகளில் மீளக் குடியமர்ந்து வாழ்வதற்கு வகை செய்ய வேண்டும். வடக்கு - கிழக்கு வாழ் மக்கள், இராணுவ ஆதிக்க அச்சமின்றி, நிம்மதியாக வாழ புதிய அரசாவது வழிவிடுமா?

# தொழில்துறை அமைதியின்மை பற்றி விசாரிக்க ஆணைக் குழு நியமிக்குக!

## ஐ. தே. க வருடாந்த மாநாட்டில் ரணில் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 4

தற்சமயம் தொழில் துறையில் நிலவும் அமைதியின்மை பற்றி விசாரிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நிறுவும் படி எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் பேசியபோது அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

தற்போது தொழில் துறையில் இடம்பெற்று வரும் வேலை நிறுத்தங்களின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டுவருவதாக பொ. ஐ. மு. அரசு எண்ணுமானால் அதனை விசாரிக்க அரசு மூன்று பேர் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை உடனடியாக நியமிக்க வேண்டும்.

அந்த ஆணைக்குழுவின் தலைவராக ஒய்வு பெற்ற நீதி அரசர் ஒருவர் இருக்க வேண்டும். அரசு மற்றும் எதிர்தரப்பு ஆகியவற்றிலிருந்து தலா ஒவ்வொருவர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்றும் திரு. விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஒ-எ)

### விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றதை அடுத்து

# கைதிகள் தாக்கப்பட்ட சம்பவம்; நேரடி விசாரணைக்கு உத்தரவு

சென்னை, மார்ச். 4

சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ள 'தடா' கைதிகள் மீது சிறைக்காவலர்கள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி, சிறைக்குச் சென்று நேரில் விசாரணை நடத்தும்படி சென்னை, உயர்நீதிமன்றம், 'தடா' வழக்குகளை விசாரணை செய்யும் நீதிபதிக்கு உத்தரவிட்டுள்ளது.

சென்னை மத்திய சிறையில் இருந்து விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் சிலர் தப்பிச் சென்றதை அடுத்து ஏனைய 'தடா' கைதிகள் மீது காவலர்கள் தாக்குதல் நடத்தியதாக முன்பு தெரிவிக்கப்பட்டது.

அது தொடர்பாக மனித உரிமைக் குழு ஒன்றின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அம்மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. சிவராஜ் பட்டீல் முன்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

'தடா' வழக்குகளை விசாரணை செய்து வரும் இரண்டாவது நீதிமன்ற நீதிபதி திரு. வி. இராதாகிருஷ்ணன் மத்திய சிறைச்சாலைக்கு நேரில் சென்று, அங்கு விசாரணை நடத்தி காயமடைந்த கைதிகளின் பட்டியலையும், கைதிகளுக்கு ஏற்பட்டுள்ள காயங்களின் தன்மைகளையும் கொண்ட அறிக்கை ஒன்று நாளை மறுநாள் திங்கட்கிழமை உயர்நீதி மன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

சிறைக்கைதிகள் தாக்கப்பட்ட சம்பவம் மனித உரிமைகளை மீறிய செயல் என்று பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர். [ஒ-எ-5]

## கூவம் நதிக்கரையில் ஒருவரின் சடலம் மீட்பு

சென்னை, மார்ச் 4

சென்னை மத்திய சிறையிலிருந்து அண்மையில் தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரின் சடலம், மத்திய சிறை அருகே கூவம் நதிக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மேஸ்திரி என்று அழைக்கப்பட்டு வந்த சண்முகவேல் என்பவரின் சடலம் அது என்று அடையாளம் காணப்பட்டதாகவும் —

சிறையிலிருந்து தப்பியபோது அவர் காயமடைந்திருக்கலாம் என்றும் இந்தியப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-எ-5)

## தப்பியோரை கைது செய்ய 25 பொலீஸ் குழுக்கள்!

சென்னை, மார்ச் 4

சென்னை மத்திய சிறையிலிருந்து தப்பியோடிய விடுதலைப் புலிகள் சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் 25 பொலீஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாண்டிச்சேரி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் உட்பட சென்னையை அடுத்துள்ள பல பிரதேசங்களில் பொலீஸாரின் தேடுதல் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-5)

### ஊட்டச் சத்து குறைவு காரணமாக

# குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு யாழ். நகரத்தில் தொடர்கிறது!

## சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ் மாநகர எல்லைக்குள் குழந்தைகள் மத்தியில் ஊட்டச்சத்துக் குறைவினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்ந்து கவலை தருவதாக உள்ளது.

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம் தமது கடந்த வருட அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

ஊட்டச்சத்துக்குறைவு குழந்தைகளில் நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத்தும். இதனை நாம் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட குழுக்களுக்குத் தேவையான ஊட்டச் சத்து வழங்கும் திட்டங்களை மேற்கொள்ள அரசுசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் உதவியைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட எம் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் பாதிப்புகள் பாரிய பிரச்சினையாகத் தொடர்கிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார நிலைவரம் பாதிக்கப்படுவதற்குரிய காரணிகளையும் இந்த அறிக்கை வெளியிட்டுள்ளது.

சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு ஏற்பட்டுள்ள வருமான இழப்பு, மக்கள் தொகையில் 40 சதவீதமானோர் இடம்பெயர்ந்துள்ளமை, குடாநாட்டிலிருந்து திறமை வாய்ந்தவர்கள் வெளியேறுதல், உள்ளூர் உணவுத் தயாரிப்புக்கு தேவையான பொருள்கள் குறைவாக உற்பத்தியாவது ஆகிய அக்காரணிகளில் சில என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ-4)

## யாழ். மாவட்ட பாடசாலை உடற்பயிற்சிப் போட்டி

### இன்று ஸ்கந்தவரோதயாவில்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் மாவட்ட நிலை இறுதி உடற்பயிற்சிப் போட்டி இன்று சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும். காலை அரை இறுதிப் போட்டிகளும் பி.ப. 2 மணிக்கு இறுதிப்போட்டிகள் ஆரம்பமாகும்.

ஏறத்தாழ 72 பாடசாலைகளில் இருந்து — 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குகொள்கிறார்கள்.

இப் போட்டிகளில் வெற்றி பெறும் 15 வயது ஆண் பிரிவுக்கு லெப். கேணல் சாள்ஸ் நினைவாகவும், பெண் பிரிவுக்கு லெப். கேணல் பாமா நினைவாகவும், 17 வயது ஆண் பிரிவுக்கு கப்டன் பண்டிதர் நினைவாகவும், பெண் பிரிவுக்கு மேஜர் சோதியா நினைவாகவும், 19 வயது ஆண் பிரிவு லெப். சங்கர் நினைவாகவும், பெண் பிரிவுக்கு 2ஆம் லெப். மாலதி நினைவாகவும் வெற்றிக் கேடயங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

அத்துடன் இவ்வருடம் முதல் முறையாக அதிகளவு கூடிய புள்ளிகளைப் பெறும் பாடசாலைக்கு கேணல் கிட்டு நினைவாக விசேட கேடயம் வழங்கப்படவிருக்கிறது.

இச் சுற்றுக் கேடயங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பும், எழிலகம், சுவையருவி நிறுவனங்களும் வழங்குகின்றன ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறும் முதல் மூன்று அணி வீரர்களுக்கும் தனித்தனியாகச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப் பெருவிழாவுக்கு முதன்மை விருந்தினர்களாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்செல்வனும் யாழ். கல்வித் திணைக்கள கணக்காளர் திரு. இ. சுகுணதீரனும் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினர்களாக வலயம்-1 கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியும் வலயம்-2 கல்விப்பணிப்பாளர் திரு. கந்தசாமியும் பங்குபற்றுவர். திருமதி. வ. [illegible] பரிசில்களை வழங்குவார்

## துணைத்தூதராக மீண்டும் கௌதமதாஸ

சென்னை, மார்ச் 4

சென்னையில் இலங்கை அரசின் துணைத் தூதராக திரு. எஸ். கௌதமதாஸ மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

1977 முதல் 1980 வரை திரு கௌதமதாஸ சென்னையில் இப்பதவியை வகித்து ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-5]

## கோப்பாயில் ஆய்வுப்பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 4

அரசசார்பற்ற நிறுவனம் என்றால் என்ன? என்ற தலைப்பிலான ஆய்வுப்பட்டறை ஒன்று கோப்பாய்மக்கள்நலன் காக்கும் பிரிவில்சென்றமாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

ஐக்கிய இராச்சியத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் ஆரம்பமாகியிருக்கும் இவ் ஆய்வுப்பட்டறை இம்மாதம் முதலாம் திகதியும் நடைபெற்றது.

எதிர் வரும் 10, 14, 17, [illegible] 8.30 மணிமுதல் இவ்வாய்வுப் [illegible] பெறும். (ஒ-4)

## புலிகளின் குரல் வானொலியில்

04 — 03 — 1995

சனி இரவு

★ 8-01 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கலந்துரையாடுவோம் — ''பெண்களின் பிரச்சினைகள் என்றால் என்ன?

05 — 03 — 1995

ஞாயிறு காலை

★ 7-08 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

சனி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி - வினா
★ 6-00 — சிந்தனைக்கு சில வினாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு

## மிஹிந்தலையில் வர்த்தக வலயம்

அடுத்த சுதந்திர வர்த்தக வலயம் மிஹிந்தலையில் நிறுவப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா இத்திட்டத்துக்கு அங்கீகாரம் அளித்து விட்டதாக கைத்தொழில் அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக்காதெரிவித்தார். (ஒ-எ)

## சிகிச்சைபெற லண்டனுக்கு செல்லும் சிறிமா!

இன்னும் இரண்டு மாதங்களில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பலவீனமாக உள்ள தனது கால் ஒன்றுக்கு சிகிச்சை பெறுவதற்காக லண்டன் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் இப்போது கடுங்குளிர் வீசுவதால் சிறிமாவின் இப்பயணம் உடனடியாக மேற்கொள்ளப்பட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகளுக்கு ஒய்வூதியம்

விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறும் விவசாயிகளின் மாசி மாத ஒய்வூதியக் கொடுப்பனவுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10மணிக்கு சமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்டக்காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளன. (ஒ-14)

## பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வட்டு. விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ப. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி வட்டு லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர் கே. இராதாகிருஷ்ணன், வட்டு. செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. நா. குகராசா, வலி. மேற்கு பிரதேச சபைப் பொறுப்பதிகாரி திரு. க. திரவியம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-14)

★ ★ ★

ஆவரங்கால் மகாஜன வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளைஞாயிற்றுக்கிழமை பிற்பகல்2மணிக்கு ஆவரங்கால் சிவன் மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. துரை எங்கரசு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலயம் 2 இன் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமியும் சிறப்புவிருந்தினராக கோப்பாய் கோட்ட திட்டமிடல் உதவியாளர் திரு ந. சிவகடாட்சமும் கலந்து கொள்வர். (ஒ-14-155)

# சாமி இருந்த இடத்தில் இன்று 'ஆமி' இருக்கிறது

## நாடாளுமன்றில் தமிழ் எம்.பி. பேச்சு

வடக்கு - கிழக்கு ஆலயங்களில் இருந்து பாரம்பரிய பெறுமதிமிக்க தொல்பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன. சாமி இருந்த மூலஸ்தானங்களில் இன்று ''ஆமி'' இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான திரு. கே துரைராஜசிங்கம் மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் கூறினார்.

சமய கலாசார நிதி ஒதுக்கீடு விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

மசடோனியா மன்னன் மகா அலெக்ஸாண்டர் இந்தியாவுக்கு படை எடுத்து வந்தார். அந்தச் சமயம் அவன் வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரை துன்புறுத்தக் கூடாது என்று தனது படையினருக்கு கடும் உத்தரவு விடுத்திருந்தான்.

வணக்க தலங்களை அழிக்கக் கூடாது என்றும் அவன் உத்தரவிட்டிருந்தான்.

வழியில் கிரேக்க நாவலாசிரியர் கோமரின் இல்லத்தை நாசமாக்க வேண்டாம் எனவும் பணித்தான். அந்த இடம் அழிக்கப்பட்டிருந்தால் மாபெரும் கிரேக்க காப்பியங்கள் இன்று மக்களுக்கு கிடைத்திராது.

ஆனால் இன்று வட - கிழக்கில் சாமி இருந்த ஆலயங்களில் ''ஆமி'' இருக்கிறது. எமது கலாசார தொல்பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன என்றார். (ஒ-3)

### கொழும்பு காக்கைதீவு முகாம்

# தமிழ் அகதியிடம் இருந்து மீட்கப்பட்ட புலித்தோல்!

கொழும்பு, முகத்துவாரம் காக்கை தீவு அகதி முகாமில் தங்கியிருக்கும் தமிழ் அகதி ஒருவரிடம் இருந்து ஆறரை அடி நீள சிறுத்தைப் புலியின் தோலை பொலீஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு அனுப்பப்படுவதற்காக இத்தோல் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் தான் இந்த சிறுத்தைப்புலித் தோலை வாங்கிக் கொண்டு வந்ததாக சந்தேகநபர் தெரிவித்தார்.

# பேச்சின் முன்னேற்றத்தை அவதானிக்கிறது இந்தியா

## அந்நாட்டு ஜனாதிபதி தகவல்

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் அந்த நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உட்பட்ட வகையில் ஒரு சமாதானத் தீர்வை காணவேண்டும் என்ற நிலைப்பாட்டையே இந்தியா கொண்டுள்ளது.

எனவே இந்தப் பேச்சுவார்த்தை முயற்சியின் முன்னேற்றத்தை இந்தியா நெருக்கமாகவும், அனுதாபத்துடனும் அவதானிக்கிறது.

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள மங்கள முனசிங்கவின் நியமனப்பத்திரத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் நடந்த நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார். (ஒ-3)

# தனியார்மய திட்டத்துக்கு தொழிற்சங்கங்கள் ஆதரவு

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 4

அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தும் திட்டத்துக்கு ஆதரவுதருவதற்கு தொழிற்சங்கங்கள் முன்வந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா ரெலிகொம், இலங்கை மின்சாரசபை ஆகியவற்றின் தொழிற்சங்கங்கள் தனியார்மயத்திட்டத்துக்கு முன்னர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன என்றும்—

இப்போது இவையும் ஏனைய தொழிற்சங்கங்களும் தனியார் மயத்துக்கு பூரண ஆதரவைத்தர முன்வந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

தனியார் மயத்திட்டத்தினால் அரசாங்கத்துக்குசுமார் 400கோடி ரூபா பணத்தைச் சம்பாதிக்க முடியும் என்று பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்தார். [ஒ-எ-6]

# யாழ். செஞ்சிலுவைக்கு நிதி வழங்க இணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்குத் தேவையான நிதியை வழங்க தலைமை அலுவலகம் உறுதியளித்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத் தலைமை அலுவலகத்துக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க சம்மேளனம் நிதி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதை அடுத்து யாழ். கிளைக்கு நிதி வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கிளை செயலாளர் வி. கே. கணேசலிங்கம் கடந்த வாரம் கொழும்பில் தலைமையக அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய சமயம் நிதி வழங்கஇணக்கம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். கிளை நிர்வாக செலவுக்கும், அபிவிருத்தி வேலைகளுக்கும் இனி நிதி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

# சார்க் மாநாடு டில்லியில் மே 2 இல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 4

ஒத்திவைக்கப்பட்ட சார்க் உச்சிமாநாடு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி இந்தியத் தலைநகர் புதுடில்லியில் ஆரம்பமாகிறது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இம் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்து விட்டார்.

பாகிஸ்தான் சார்பில் அதன் ஜனாதிபதியே கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் மாநாடு நடைபெறும் திகதியை பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ளது. (ஒ-எ)

### அம்பாறைப் பகுதியில்

# கடைகளில் பொருள்களை வைத்திருக்கக் கட்டுப்பாடு

அம்பாறையில் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்களின் அளவினை இராணுவத்தினர் கட்டுப்படுத்தியுள்ளனர்.

தமிழர் வாழும் சகல பிரதேசங்களிலும் உள்ள கடைகள் யாவற்றிலும் குறிப்பிட்ட பொருள்கள் குறித்த அளவில் மட்டுமே இருக்க வேண்டும் என அந்தந்தப் பகுதி இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்படி ஒரு கடையில் 5 கிலோ சீனி, 10கிலோ மா 10 ரின் மீன் கள் மட்டுமே வைத்திருக்க முடியும். அரிசி, மருந்துப் பொருள்களுக்கும் இக்கட்டுப்பாடு உள்ளது.

ஆனால் அம்பாறை மாவட்டத்தல் சிங்களவர்கள், முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களுக்கு கட்டுப்பாடு ஏதும் இல்லை. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக்கான. .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யில் 33 கே. வி மின்திட்டம், 132 கே. வி. மின் திட்டம் ஆகியவற்றை இவர் பார்வையிடுவன்டது மதிப்பீடுகளையும் மேற்கொள்வார்.

இந்தப் பொறியியலாளர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். வரும் மேற்கு நாட்டு ராஜதந்திரிகளுடன் வர திட்டமிட்டுள்ளார் என்றும் —

இவர் யாழ். வருவதற்கான அனுமதியைப்பெறும் முயற்சியில் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் நேற்று ஈடுபட்டிருந்தார் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டர் இராமநாதன் (செல்லப்பர்)

மார்க்கண்டர் இராமநாதர் (செல்லப்பர்) 03- 03 – 95 இல் காலமானார்.

அன்னார் புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மார்க்கண்டர் வள்ளியம்மையின் அன்பு மகனும், கந்தையா - சிவக்கொழுந்துவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவராமலிங்கத்தின் அன்புத் தந்தையாரும், மகேஸ்வரியின் மாமனாரும், சுகந்தினி, குகதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, பரராசசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) தில்லையம்பலம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், சதாசிவம், காலஞ்சென்ற கோபாலபிள்ளை, காலஞ்சென்ற சண்முகம், சிவப்பிரகாசம், காலஞ்சென்ற மனோன்மணி, தியாகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (4—3—1995) சனிக்கிழமை காலை 9–00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
இ. சிவராமலிங்கம்
(மகன்)

யாழ் மத்தியகல்லூரி,
வளாகம்

[35491]

### திருமதி சுதந்திரா சுந்தரலிங்கம்

திருமதி சித்திரா – சுந்தரலிங்கம் நேற்று காலமானார் இவர் 8/2 ஸ்ரான்லிக் கல்லூரி வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், லோகேஸ்வரி [ஆசிரியை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தி], ஞானேஸ்வரி [கைத்தொழில் சக்திவள அமைச்சு திருமலை], ஜெயந்திக சுரேந்திரன் (சுவிஸ்), சுதாகரன் [சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீதரன் (கனடா), சண்முகவடிவேல் (பிரதி-முகமையாளர் தேசிய வீடமைப்பு அதிகாரசபை)ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இராஜேஸ்வரி [ராணி], யோகராசா (கனடா), புவனேஸ்வரி [தேசிய சேமிப்பு வங்கி கிளிநொச்சி], பதமநாதன் [ஜேர்மனி], தர்மேந்திரன் [யாழ் கல்வித் திணைக்களம்], கருணாதேவி (முன்னாள் பொலீஸ் திணைக்கள உத்தியோகத்தர்), தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), சிவகுமார் (சுவிஸ்] ஆகியோரின் மைத்துனியும், பொன்னுத்துரை பாக்கியத்தின் அன்பு மருமகளும் ஆவார்.

ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
பொ. சுந்தரலிங்கம்
மினி பஸ் உரிமையாளர் 29 ஸ்ரீ 6804

இல 8/2 ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, (கணவர்)
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(35498)

### கந்தையா சின்னத்தம்பி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சிவம் (தொலைத் தொடர்புத் திணைக்கள பொறியியலாளர், வட-கிழக்கு மாகாணசபை-மன்னார்), அன்னலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), வேதநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராஜேஸ்வரி (தொலைத் தொடர்புத் திணைக்களம் மன்னார்), சொர்ணலட்சுமி (உத்தரவுபெற்ற வியாபாரி நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), சுதந்திரபாலா (கணக்காளர் – செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்ஷா, திவாகரன் (மன்னார்), நளாயினி, நிரஞ்சினி (வேம்படி மகளிர் கல்லூரி), கௌரிசங்கர், கௌசிகன் (யாழ். இந்துக் கல்லூரி), சௌரிநாத் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சுப்பிரமணியம், மற்றும இரத்தினம் (புகையிலை வர்த்தகர்) ஆகியோரின் சகோதரரும், இராசையா, பொன்னரத்தினம், சிவரத்தினம், இராசரத்தினம, அன்னம்மா, இரத்தினம், ஞானரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [4-3-95] சனிக்கிழமை நண்பகல ஒரு மணிக்கு ஞானபண்டித வித்தியாசாலை வீதி-கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. அன்னலிங்கம்
[மகன்]

ஞானபண்டித வித்தியாசாலை வீதி,
கொக்குவில் மேற்கு.

[35496]

### அன்ரனிப்பிள்ளை மைக்கல்பிள்ளை

யாழ். – கல்வியங்காடு சவேரியார் ஆலயத்தைச் சேர்ந்த அன்ரனிப்பிள்ளை மைக்கல்பிள்ளை நேற்று கொழும்பில் காலமானார்.

இவர் ஹெலனின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (இத்தாலி), பாபு ஜேர்மனி), ஜெனோவா (ஜேர்மனி) பாலா (கனடா), றொபின் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
றொபின்
(மகன்)

சவேரியார் கோயில் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(35499)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04- 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச். 4

1994, 95 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியில்—வெட்டுப்புள்ளியால் — பாதிக்கப்பட்ட அனைத்து துறை மாணவர்களுக்குமான பொதுக்கூட்டங்கள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன.

வலிகாமம், தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் —

வடமராட்சி பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என்று பாதிக்கப்பட்ட மாணவர் குழு அறிவித்துள்ளது. (ஐ)

## நரோமா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பட்டு 7ஆம் திகதி காலையில் பருத்தித்துறையை வந்தடையும் நரோமா கப்பல் உடனடியாகதிரும்பிச் செல்ல இருப்பதால் இதில் பயணம் செய்ய தமது பெயரைப் பதிவு செய்தவர்கள் அன்று அதிகாலையே பருத்திதுறை துறைமுகத்துக்கு வருமாறு கேட்கப்படுகின்றனர் (இ-7)

## ஜெயலலிதா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
விலக வேண்டும்.

தமிழ்நாடு சட்ட சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தப்பிய சம்பவத்தின் பின்னால் பெரிய சக்தி ஒன்று சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டிய அவர், இது தொடர்பாக தமிழக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

## போராட்ட...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
பத்தில் ஆரம்பமானது.

எழுத்தாளர்கள், கலைஞர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள், அறிஞர்கள், கல்விமான்கள், பேராளிகள் என்று எண்ணூறுக்கும் மேற்பட்டோர் நேற்றைய முழு நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

இளங்கலைஞர் மண்டபம் நிறைந்து காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கலை இலக்கிய கருத்தரங்கு ஒன்றில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையினர் கலந்துகொண்டது இதுவே முதற்தடவையாகும்

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டுமின்றி மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கானோர் இக் கருத்தரங்கில் பங்குபற்றினர் இளம் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மூத்த எழுத்தாளர்கள் கலைஞர்கள் என்று பல தரத்தினரும கருத்தரங்கில் கலந்து கொண்டமை அதற்கு முழுமை சேர்த்தது.

தமிழீழப் போராட்டம் பற்றிய சர்வதேச வெளியீடுகள் ஈழத்துச் சமகால நூலகள், சஞ்சிகைகள் கொண்ட கண்காட்சியும் அங்கு இடம்பெற்றது.

திரு. சொக்கலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

கலை இலக்கியப்படைப்பாளிகள் சமுகத்தின் முன்னேற்றத்தில் எத்தகைய பங்கு வகிக்கலாம் என்ற கேள்வி எழுகின்றது. மனிதர்கள் தம் இடபெபொழுது இருப்பதிலும் பார்க்க முன்னேறிய நிலைக்கு மேன்நிலையடைய வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் என்ற முறையில் நாங்கள் எமது பாத்திரத்தை வகித்தவர்களாவோம்,

மனிதன் தன்னுடைய அச்சத்தை விடவேண்டும். மனப்பூர்வமாக, சத்தியத்தோடு செயற்பட வேண்டும் எமது கலை இலக்கியப்படைப்பாளிகள் நீண்டகாலம் வாழக் கூடிய ஆக்கங்களை உருவாக்க வேண்டும் – என்றார்.

நேற்றைய காலை நிகழ்ச்சியில் கலாநிதி நா. சுப்பிரமணியன், திருவாளர்கள், செம்பியன் செல்வன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், குழந்தை ம. சண்முகலிங்கம், த. கலாமணி ஆகியோரும் உரையாற்றினர்

கல்வி மேம்பாட்டுக் கழகத் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் யோசெப் அடிகளார், திருமதி மனோன்மணிசண்முகதாஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர்.

(அ-க-111)

ஜே. வி. பி. காலத்தில் பலர் கொலையுண்ட

# கொடூர சித்திரவதை கூடம் பியகமவில் கண்டுபிடிப்பு!

## ரணிலின் வீட்டுக்கு அருகில் இயங்கியது!!

கொழும்பு மார்ச். 4

தென் பகுதியில் ஜே.வி.பி. இயக்கம் தீவிரமாகச் செயற்பட்ட காலத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சித்திரவதைக் கூடம் ஒன்று பியகம தேர்தல் பிரிவில் உள்ள பற்றலந்த என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தென் பகுதியில் தகவல் வெளியாகியுள்ளது.

பியகமவில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா முன்னர் வசித்து வந்த வீட்டுக்கு அண்மையில் இந்த சித்திரவதைக் கூடம் இயங்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சித்திரவதைக் கூடம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை பொலீஸார் விசாரணை செய்யவுள்ளனர் என்று "ராவய" பத்திரிகை ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் பி. பி. விக்க தெரிவித்துள்ளார்.

பியகமவில் இந்த சித்திரவதைக் கூடம் இயங்குவதற்கு பொலீஸ் அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் உடந்தையாக இருந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜே வி பி. இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையானோரும், அப்போது இருந்த எதிர்க்கட்சியுடன் தொடர்புகளை வைத்திருந்தவர்கள் பலரும் இந்த சித்திரவதை கூடத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது. (ஐ-6)

# சமாதான முயற்சி வெற்றிபெற சகல சமூகத்தினர் ஆதரவு தேவை

## ஜனாதிபதி சொல்லுகிறார்

கொழும்பு, மார்ச் .4

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் சாதகமான முறையில் ஆதரவளித்துள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த முயற்சி வெற்றி அளிப்பதற்கு இந்த நாட்டின் எல்லா சமூக மக்களினதும் ஆதரவு அவசியமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

மகரகமவில் நேற்று மாகாண சபை, பிரதேசசபை மற்றும் சமூக இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலேயே இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

தமிழீழம் கோரிக்கையைத் தாம் கைவிடுவதற்குத் தயாராக உள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் வாழும் மக்களின் கஷ்டங்கள் தீர்க்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தேவையான பொருள்கள் தடங்கலின்றிக் கிடைப்பதற்கு வகை செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமே வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெறலாம்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நாம் அக்கறையாக உள்ளோம். அதற்கான வழியில் அரசு ஒரு முடிவுக்கும் வந்திருக்கிறது. — என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். [அ]

## பல்கலைக் கழக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விவரம் வெளியே தெரியாமல் இருந்து வந்தது.

ஆனால் தற்போது மாணவர்களின் பெறுபேறுகள் புள்ளி நீதியாக மட்டுமன்றி — வாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் அவர்களின் நிலையையும் குறிப்பிட்டு — வெளியிடப்பட்டு வருகின்றது.

இதனால் —

திறமை, மாவட்ட மற்றும் பின்தங்கிய மாவட்ட நீதியாக பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை, வீதம் ஆகியன வெளியே தெரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில் திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களின் படி 1992/93ஆம் கல்வியாண்டிலும் 1993/94 ஆம் கல்வி யாண்டிலும் — திறமை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்க வேண்டிய 40 வீதத்துக்குப் பதிலாக உண்மையில் அனுமதி வழங்கப்பட்ட வீதம் வருமாறு :-

| | | 1992/93 | 1993/94 |
|---|---|---|---|
| மருத்துவம் | — | 36. 9 % | 35. 9 % |
| பல் மருத்துவம் | — | 27 6 % | 28. 6 % |
| மிருக வைத்தியம் | — | 36. 4 % | 25 4 % |
| விவசாயம் | — | 35. 7 % | 36. 7 % |
| உயிரியல் விஞ் | — | 12 7 % | 6.5 % |

உண்மையில் தீர்மானிக்கப்பட்ட கொள்கைப் பிரகாம் 40 வீதம் திறமை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேபோன்று —

தமிழர் தாயகத்தில் உள்ள யாழ். பல்கலைக் கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கும் மாணவர்களை அனுமதிப்பதில் ஸ்ரீலங்கா அரசும். பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவும 'குள்ளத்தனமான' நடவடிக்கை மேற்கொண்டிருப்பது புள்ளிவிபரங்களில் அம்பலமாகியுள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் தமக்குரிய வசதிகளின் பிரகாரம் தமது பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறைக்கும் எத்தனை மாணவர்களை அனுமதிக்க முடியும் என பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவுக்கு அறிவிப்பது வழக்கம்,

இந்த அறிவித்தல் பிரகாரம், தமிழர் தாயகம் தவிர்ந்த ஏனைய இடங்களின் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு ஏறத்தாழ அந்தந்தப் பல்கலைக்கழகங்கள் கோரிய எண்ணிக்கை அளவு அல்லது அதிலும் கூடிய எண்ணிக்கை அளவு மாணவர்களை அனுமதித்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு —

யாழ். பல்கலைக்கழகத்துக்கும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துக்கும் தேவையான மாணவர்களில் அரைவாசிப் பகுதி மாணவர்களையே அனுமதித்துள்ளது.

இதன் மூலம் தமிழர்களுக்குக் கிடைக்கவிருந்த பல்கலைக்கழக அனுமதி வாய்பபை சுமார் ஐம்பது சத வீதம் இழக்கச் செய்வதில் ஆணைக்குழு வெற்றியீட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது

உதாரணத்துக்கு —

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் 1993/94 ஆம் கல்வி யாண்டில் மாணவர் அனுமதிக்கக் கோரிய மொத்தத் தொகையும் வழங்கப்பட்ட அனுமதியும் வருமாறு'-

| பல்கலை. | | கோரியது | அனுமதித்தது |
|---|---|---|---|
| கொழும்பு | — | 1475 | 1393 |
| பேராதனை | — | 1748 | 1701 |
| ஜெயவர்தனபுர | — | 1422 | 1322 |
| களனி | — | 1333 | 1261 |
| றுகுனு | — | 1055 | 986 |
| மொறட்டுவை | — | 540 | 527 |
| யாழ்ப்பாணம் | — | 1180 | 517 |
| கிழக்கிலங்கை | — | 520 | 308 |

முக்கிய துறைகளில் இதே போன்ற நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. உதாரணத்துக்கு மருத்துவத் துறையில் பல்கலைக்கழகங்கள் கோரிய மற்றும் அனுமதித்த மாணவரின் எண்ணிக்கை வருமாறு:-

| பல்கலை. | | கோரியது | அனுமதித்தது |
|---|---|---|---|
| கொழும்பு | — | 175 | 179 |
| பேராதனை | — | 148 | 148 |
| ஜெயவர்தனபுர | — | 110 | 101 |
| களனி | — | 188 | 178 |
| றுகுனு | — | 100 | 100 |
| யாழ்ப்பாணம் | — | 200 | 64 |

திறமை அடிப்படையில் 40 வீத அனுமதி வழங்கும் கொள்கையையாவது ஒழுங்காக நடைமுறைப்படுத்தியிருந்தால் யாழ் பல்கலைக் கழகத்துக்கு எஞ்சியுள்ள இடங்களுக்க ஓரளவு மாணவர்களையாவது அனுமதிக்கக் கூடியதாக இருந்திருக்கும் எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது

கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பல்கலைக் கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுவதால் —

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் தமது வசதிக்கு ஏற்ப மாணவர்களை அனுமதித்து போதிய நிதியைப் பெற்றுக்கொள்ள —

யாழ் ,கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு போதிய மாணவர்கள் அனுமதிக்கப்படாததால் அவை போதிய நிதிபெற முடியாத இக்கட்டு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-3)

# 'போருக்கான முடிவு' மூலம் யாழ். நூலகத்துக்கு நிதி!

## திரட்டுகிறார் சிங்கள எழுத்தாளர்

கொழும்பு, மாரச். 4

"போருக்கான முடிவு" என்ற பெயரில் நூல் ஒன்று தென் பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலை எழுதியுள்ள லால் சமரசிங்கா என்னும் சிங்கள எழுத்தாளர் நூல் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் புரைமைப்புக்காக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு யுத்தத்தின் காரணமாக உயிரையும், உடல் உறுப்புக்களையும் இழந்த சிங்கள தமிழ், முஸ்லீம் சமூக அங்கத்தவர்களுக்கு இந்த நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நூலின் முதல் பிரதி அண்மையில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு, வசந்த ராஜாவிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# கலை இலக்கிய கருத்தரங்கு; இறுதி நாள் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 4

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் வெளிச்சம் சஞ்சிகையினரும் இணைந்து நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நடத்தி வரும் கலை இலக்கிய கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

திருமதி. நாச்சியார் செல்வநாயகம் நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார்.

விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு சு. ரவி தொடக்க உரை நிகழ்த்துவார்.

"அனுபவம், அறிகை, எடுத்துரைப்பு, கலை இலக்கிய உருவாக்கம் பற்றிய ஒரு குறிப்பு" என்ற விடயத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலுரை வழங்குவார்.

முற்பகல் 10 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும்.

'வாழ்வியலுடன் இணைந்த கவிதைகள்' என்ற தலைப்பில் கலாநிதி சபா. ஜெயராசா உரையாற்றுவார்.

கவிஞர் விவேக் கருத்துரை வழங்குவார்.

'வாழ்வியலுடன் இணைந்த இசை' என்ற தலைப்பில் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை உரையாற்றுவார்' பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் கருத்துரை வழங்குவார்.

தொடர்ந்து "பரந்துபட்ட மக்களுக்கான கலை இலக்கியம்" என்ற தலைப்பில் திரு. நா யோகேந்திரன் உரையாற்றுவார்.

பின்னர் கலந்துரையாடல் இடம்பெறும். கலந்துரையாடலை அடுத்து கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை நிறைவுரைஆற்றுவார்.

இறுதியாக கவியரங்கம் நடைபெறும்.

"நெஞ்சில் குடியிருக்கும் நினைவுகள்" என்ற தலைப்பிலான அந்தக் கவியரங்கத்தில் கவிஞர்கள் முருகையன், ச.வே. பஞ்சாட்சரம், சோ. பத்மநாதன், பண்டிதர் வீ. பரந்தாமன், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர், காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் பங்குபற்றுவர். (ஐ-5)

## எரிகாயம்

எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்குக்கு, மண்எண்ணெய் என்று நினைத்து பின்னரை விட்டதால் அது குபீரென தீப்பற்றியதில் ஒருவர் பலத்த எரிகாயங்களுக்குள்ளாக நேரிட்டது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த எஸ். பத்மநாதன் (வயது 35) என்பவர் எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஓ-15]

## நாளை

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கும் பயிலரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரியில் நடைபெறும். (ஓ-14)

## விலங்கியல் செய்முறை பட்டறை

யாழ்.பல்கலைக்கழக மாணவர் உதவியுடன் யாழ். பல்கலைக் கழக விலங்கியல் துறையினர் நடத்தி வரும் விலங்யல் [பூச்சியியல்] செய்முறைப் பட்டறைத் தொடரின் 4 ஆவது செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ஓ-14)

## பேராசிரியரின் மனைவி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நடத்தக் கோரியிருக்கிறார்.

நடந்த சம்பவத்தை தமது முறைப்பாட்டில் விவரித்துள்ள பேராசிரியர் "ராகிங்"இல் சம்பந்தப்பட்டவர் பற்றிய சில துப்புகளையும் கொடுத்துள்ளார். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org